Office of the Prime Minister
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
பிரதம அமைச்சரின் அலுவலகம்

875 Avenue of the Americas, Suite 2309
New York, NY 10001, USA
www.tgte.org
pmo@tgte.org

பிப்ரவரி 19, 2026
பெறுநர்:
ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்
தலைவர்
2301 அரசியலமைப்பு வீதி NW
வாஷிங்டன் DC
அமைதிச் சபை
அமெரிக்கா

**தலைப்பு: வடகிழக்கு சிறிலங்காவில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்த அமைதிச் சபையிடம் கோரிக்கை!!!**

மதிப்பிற்குரிய ஜனாதிபதி டிரம்ப்,

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் (TGTE) சார்பாக, அமைதி சபையை அமைப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதன் சாசனத்தில் கூறப்பட்டுள்ளபடி, "போரால் பாதிக்கப்பட்ட அல்லது அச்சுறுத்தப்பட்ட பகுதிகளில் நீடித்த அமைதியைப் பாதுகாக்க" முயல்கிறது. இந்த புதிய அமைப்பு நாடுகளுக்கும், அரசற்ற தேசிய இனங்களுக்கும் இடையே பரவலாக நிலவும் பிரச்சனைகளை மற்றும் தீர்க்கப்படாத போர்களைத் தீர்க்க உதவும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு முக்கியமாக இறையாண்மை கொண்ட நாடுகளுக்கு இடையிலான போர்களைத் தடுக்க கட்டமைக்கப்பட்டது. அந்த வகையில், அது குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளது. சூயஸ் நெருக்கடி ஒரு பெரிய போராக விரிவடைவதைத் தடுப்பதிலும், கியூபா ஏவுகணை நெருக்கடியின் போது பதட்டங்களைத் தணிப்பதிலும், காஷ்மீர் போன்ற இடங்களில் போர்களை தவிர்ப்பதிலும் ஐ.நா. ஆக்கபூர்வமான பங்கைக் கொண்டிருந்தது. காலனித்துவ நீக்கத்தை முன்னெடுப்பதிலும், மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் மற்றும் குடியுரிமை, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பான இரட்டை உடன்படிக்கைகள் உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகள் பற்றிய பிரகடனங்களை உருவாக்குவதிலும் ஐ.நா. வரலாற்றுப் பங்காற்றியது.

இருப்பினும், ஐ.நா.வின் காலனித்துவ நீக்க செயல்முறை பெரும்பாலும் ஆளும் நாட்டிற்கும் அடிமைப்பட்டிருக்கும் நாட்டிற்கும் இடையே கடல் (உப்பு நீர்) இருந்தால் மட்டுமே அது காலனித்துவமாக கருதப்பட்டது.

அத்துடன், காலனித்துவ நீக்கம் பெரும் வல்லரசுகளின் பூகோள நலன்களுடன் பின்னிப் பிணைந்திருந்ததால், நீதி பெரும்பாலும் சமரசம் செய்யப்பட்டது. சிலோன் (தற்போதைய சிறிலங்கா) விடயத்தில், காலனித்துவ ஆட்சிக்கு முன்னர் தனித்துவமான வரலாற்று இறையாண்மையைக் கொண்டிருந்த தமிழ் தேசத்திடம் அந்த இறையாண்மையை மீண்டும் ஒப்படைக்காமல், பெரும்பான்மை சிங்களவர்களிடம் அதிகாரத்தை மாற்றும் வகையில் சுதந்திரம் வழங்கப்பட்டது. திருகோணமலை மற்றும் கட்டுநாயக்க இராணுவ தளங்கள் உள்ளிட்ட பூகோள நலன்கள், சமத்துவமான அரசியல் ஏற்பாடுகளை விட முன்னுரிமை பெற்றன.

அனைத்து மக்களும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள்" என்று இரு சர்வதேச பிரகடனங்களின் 1-வது உறுப்புரை தெளிவாக உறுதிப்படுத்திய போதிலும், அதனை நடைமுறைப்படுத்துவது தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலேயே (ஒருதலைப்பட்சமாக) அமைந்துள்ளது. கொள்கைக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளி, பல அரசற்ற தேசிய இனங்கள் பெரும்பான்மைவாத அரசியல் அமைப்புகளுக்குள் சிக்கி விட்டுள்ளது.

உண்மையில், ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதிலிருந்து, நாடுகளுக்கு இடையிலான போர்களை விட, அந்த நாடுகளுக்குள்ளேயே அரசுகளுக்கும் அரசற்ற தேசிய இனங்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் மிக அதிக எண்ணிக்கையில் உள்ளன.ஆயினும், சர்வதேசக் கட்டமைப்பு அடிப்படையில் அரசுகளை முன்னிலைப்படுத்துவதாகவே தொடர்கிறது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, பொதுச் சபை, மனித உரிமைகள் பேரவை, சர்வதேச நீதிமன்றம் மற்றும் ஒப்பந்த அமைப்புகள் ஆகியவை அரசுகளைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன. அரசற்ற தேசிய இனங்கள் பார்வையாளர்களாகவே உள்ளன. இந்தக் கட்டமைப்பு ரீதியான வரம்பு, அரசற்ற தேசிய இனங்களுக்கு நீதியையும் விடுதலையையும் வழங்குவதில் தோல்விகளை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா அரசுக்கும் தமிழ் தேசத்திற்கும் இடையிலான போரில், சர்வதேச கட்டமைப்பின் தோல்வி வெளிப்படையாக தெரிகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வுகளின்படி, 2009-ஆம் ஆண்டு போரின் இறுதிக்கட்டத்தில் 40,000 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; மேலும் 70,000-இற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர்.ஐக்கிய நாடுகள் சபையின் உள்நோக்கிய மறுஆய்வுக் குழு (Internal Review Panel), ஐக்கிய நாடுகள் சபையின் தோல்விகளை ஒப்புக்கொண்டது; ஐக்கிய நாடுகள்

உத்தியோகத்தர்கள் துணிச்சலுடன் செயல்பட்ட போதிலும், அந்த அமைப்பின் சில பகுதிகள் பொதுமக்களைப் பாதுகாக்கும் தங்களின் பணியில்தோல்வியடைந்தன என்றும், அரசாங்கத்தின் விதிமீறல்களைக் குறைவாகப் பதிவு செய்தன என்றும், களத்திலிருந்த உத்தியோகத்தர்களின் அறிக்கைகளை வெளிவராதவாறு தடுத்தன என்றும் அது குறிப்பிட்டது.

சிறிலங்கா அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, ஐக்கிய நாடுகள் சபை போர் வலயத்திலிருந்து வெளியேறியது; இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) அங்கேயே தங்கியிருந்ததற்கு நேர்மாறாக, பொதுமக்களை சர்வதேச பாதுகாப்பின்றி கைவிடுவதாக அமைந்தது.

"போர் முடிவடைந்த பின்னரும் கூட, அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது. 2015-ஆம் ஆண்டில், சர்வதேசக் குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு கலப்பு நீதிமுறை பொறிமுறையை (Hybrid judicial mechanism) கோரி, மனித உரிமைகள் பேரவை 30/1 தீர்மானத்தை நிறைவேற்றியது. சிறிலங்கா அரசாங்கம் தனது வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்கியபோது, பல தசாப்தகாலமாக சிறிலங்காவில் வேரூன்றியுள்ள தண்டனையிலிருந்து தப்பிக்கும் போக்கு (Impunity) மற்றும் கட்டமைப்பு ரீதியான பாகுபாடுகளால் உள்நாட்டு நீதி என்பது எட்ட முடியாத ஒன்றாக இருந்தபோதிலும், ஐக்கிய நாடுகள் சபை உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் கோரிக்கைகளை நோக்கி பின்வாங்கியது. சிறிலங்காவில் நிலவும் பரவலான மற்றும் ஆழமாக வேரூன்றியுள்ள இனவாதத்தின் வரலாற்றைக் கருத்தில் கொள்ளும்போது, தமிழர்களுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்காது என்பதை ஐக்கிய நாடுகள் சபை நன்கு அறியும். உள்நாட்டுப் பொறிமுறைக்கான ஒவ்வொரு கோரிக்கையும், தண்டிப்பவரை அங்கீகரிப்பதோடு பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதிப்பையே ஏற்படுத்துகிறது.

தற்போதைய சர்வதேசக் கட்டமைப்புகளில், இனப்படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் ஏனைய அட்டூழியக் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது என்பது, அரசுகளின் விருப்பு வெறுப்புகளிலேயே தங்கியுள்ளது.ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் (Expert Panel Report) இனப்படுகொலை குற்றத்திற்கான கூறுகள் இருந்தபோதிலும், இதுவரை ஐக்கிய நாடுகள் சபை அது குறித்து எவ்வித விசாரணையையும் நடத்தவில்லை. நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (TGTE) அந்தக்கூறுகளை அடையாளப்படுத்தி, அது குறித்து விசாரணை நடத்த ஒரு விசாரணை ஆணையத்தை (Commission of Inquiry) நியமிக்குமாறு 2011 ஏப்ரல் 29 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்தது. போரின்போது, ஐக்கிய நாடுகள் சபையின் உள்நோக்கிய மறுஆய்வு அறிக்கையின்படி (Internal Review Report), பொதுச் செயலாளரின் சட்ட ஆலோசகர்கள், ஐக்கிய நாடுகள் சபை பிரிவு 99-இன் கீழ் (Article 99) ஒரு சர்வதேச விசாரணை ஆணையத்தை நியமிக்குமாறு அவரை வலியுறுத்தினர்; இருப்பினும் அது பலனளிக்கவில்லை. மேலும்,

“இனப்படுகொலை தடுப்புக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு ஆலோசகர்' (Special Advisor on the Prevention of Genocide) அமைதியான இராஜதந்திரத்தையே விரும்பியதாகவும், தான் 'வெளிப்படையாகப் பேசப்போவதில்லை' என்று அரசாங்கத்திடம் கூறியதாகவும் பின்னர் அவரது அலுவலகம் ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிட முயன்றபோது, அதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் ஆதரவு வழங்கவில்லை” எனவும் ஐ நா சபை மறு ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

தமிழ் தேசம் இராணுவமயமாக்கல், நில கையகப்படுத்தல், மக்கள் தொகை குறைப்பு மற்றும் நீதி மறுப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறது. சர்வதேச அமைப்பின் அரசு மையப்படுத்தப்பட்ட வடிவமைப்பு, உலகளாவிய உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான நிறுவனங்களிலேயே தமிழர்களை குரலற்றவர்களாக மாற்றியுள்ளது. போர் முடிவடைந்து 16 ஆண்டுகளுக்குப்பிறகும், எந்த நீதியும் இல்லாமல், பாதிக்கப்பட்டவர்கள் நீதி பெறுவதற்கு ஐ.நா.விலோ அல்லது சர்வதேச அமைப்பிலோ எந்த வழிமுறையும் இல்லை என்பதே முடிவு-இந்த சூழலில்தான் நாங்கள் அமைதிச் சபையை நோக்கிப்பார்க்கிறோம்.

நீடித்த அமைதியைப் பாதுகாப்பதற்கான அதன் பணியை சபை நிறைவேற்ற வேண்டுமென்றால், அது தேசிய சுயநிர்ணய உரிமையை மறுப்பதில் வேரூன்றிய பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். நீடித்த அமைதியை மேலிருந்து திணிக்கவோ அல்லது பெரும்பான்மை ஆதிக்கத்தின் மூலம் நிலை நிறுத்தவோ முடியாது. நீடித்த அமைதி சம்பந்தப்பட்ட மக்களின் சுதந்திரமாக வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்தை அடித்தளமாக கொண்டிருக்க வேண்டும்.

சிறிலங்காத் தீவின் வடகிழக்கில் வாழும் தமிழர்களும், உலகம் முழுவதும் இடம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களும் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க ஒரு பொதுவாக்கெடுப்பைக் கோருகின்றனர். இது வெறும் அரசியல் பெருவிருப்பு மட்டுமல்ல; இது சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு மனித உரிமைத் தேவையுமாகும் எனவே, அமைதிச் சபையை (Board of Peace) பின் வருவனவற்றைச் செய்யுமாறு நாங்கள் மரியாதையுடன் வலியுறுத்துகிறோம்:

- தமிழர்களை, தங்களது சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட அரசை அமைக்கும் உரிமை கொண்ட ஒரு 'தேசம்' (Nation) என அங்கீகரித்தல்;

- தற்போதுள்ள அரசு-மையவாத (State-centric) அமைப்பின் கட்டமைப்பு ரீதியான வரம்புகளை ஒப்புக்கொள்ளுதல்; மற்றும்

- தமிழ் தேசம் தனது அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் வகையில், புலம்பெயர் ஈழத்தமிழர்களின் பங்களிப்புடன், சிறிலங்காவின் வடகிழக்கில் ஒரு சுதந்திரமான மற்றும் நீதியான பொதுவாக்கெடுப்பை (Referendum) நடாத்துதல்.

நீதி இல்லாத அமைதி நிலைக்காது; சம்மதம் இல்லாத அமைதி தற்காலிகமானது. ஜனநாயக சுயநிர்ணயத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் தீர்வு மட்டுமே நீடித்த நிலைத்தன்மையை உருவாக்க முடியும்.

அமைதிச் சபை (Board of Peace), தனது அறிவிக்கப்பட்ட நோக்கத்திற்கு ஏற்ப உயர்ந்து நின்று, தமிழ் தேசத்திற்கான ஒரு கொள்கை ரீதியான மற்றும் நிலையான தீர்வை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் தற்போதைய சர்வதேச கட்டமைப்பின் வரலாற்றுத் தவறுகளைச் சரிசெய்ய உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். வாரியத்துடன் ஆக்கபூர்வமாக ஈடுபடவும், வாரியத்தின் விவாதங்களுக்கு உதவக்கூடிய எந்தவொரு ஆவணங்களை வழங்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மரியாதையுடன்,
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்